சார்பு நீதிமன்றம், பொள்ளாச்சி

வழக்கு எண். ஓ.எஸ். 118/2010

**DW 1 பரமசிவம்** **27.06.2024**

<u>சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு 12 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

12 ம் பிரதிவாதி எனது அக்கா மகன் என்றால் சரிதான். என் உடன் பிறந்த சகோதரி தெய்வநாயகத்தின் மகன் தான் 12 ம் பிரதிவாதி என்றால் சரிதான். தெய்வநாயகம் 27.09.2021 ல் இறந்துவிட்டார் என்றால் சரிதான். தெய்வநாயகத்தின் ஒரே வாரிசு 12 ம் பிரதிவாதி குமாரசாமி என்றால் சரிதான். சொத்துக்கள் என் தகப்பனாரின் பூர்வீக சொத்துக்கள் ஆகும். பூர்வீக சொத்துக்கள் என காட்டுவதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்தில் தெய்வநாயகத்திற்கு பங்கு உள்ளது என்றால் சரியல்ல. நாங்கள் தெய்வநாயகத்தை வைத்து பாகம் பங்கி கொண்டதால் தெய்வநாயகத்திற்கு சொத்தில் பங்கு இல்லை. 1993 ம் வருடம் அவ்வாறு நாங்கள் பாகம் பங்கி கொண்டோம். அந்த பத்திரத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், வாசாஆ 1 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. நான் சொல்லும் பத்திரத்தில் தெய்வநாயகம் கையெழுத்து செய்யவில்லை என்றால் சரிதான் நான் சொல்வது போல் தெய்வநாயகத்தை வைத்து பாகம் பங்கியிருந்தால் அந்த பத்திரத்தில் தெய்வநாயகம் கையெழுத்து செய்திருப்பார் என்றாலும், அவரை வைத்து நாங்கள் பிரிக்காத நிலையில் தான் கையெழுத்து

பெறவில்லை என்றால் சரியயல்ல. நான் சொல்லும் ஆவணத்தில் பெண் வாரிசு யாரிடமும் கையெழுத்து பெறவில்லை என்றால் சரிதான். பெண் வாரிசுகள் கையெழுத்து இல்லாமல் நாங்கள் ஏற்படுத்திக்கொண்ட வாசாஆ1 சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. பெண் வாரிசுகளுக்கு பங்கு கொடுக்க கூடாது என்பதற்காக ஆண்வாரிசுகள் அனைவரும் சேர்ந்து பெண் வாரிசுகளுக்-கு தெரியாமல் பாகம் ஏற்படுத்திக்கொண்டோம் என்றால் சரியல்ல. நானும், எனது மகனான 11ம் பிரதிவாதி சரவணக்குமாரும் ஒன்றாக தான் குடியிருந்து வருகிறோம் என்றால் சரிதான். சரவணக்குமாருக்காவும் குடும்பத்தை நான் தான் பார்த்து வருகிறேன் என்றால் சரிதான். சரவணக்குமாருக்காவும் இவ்வழக்கை நான் நடத்தி வருகிறேன் என்றால் சரிதான். எனது சகோதரர் மயில்சாமி, சரவணக்குமார் பெயருக்கு எழுதிவைத்ததாக சொல்லப்படும் உயில் சாசனத்தை நான் நீதிமன்றத்தில் தாக்ல செய்யவில்லை என்றால் சரிதான். அவ்வாறு ஒரு உயில் சாசனமே இல்லை என்றாலும் அதனால் தான் உயிலை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. மயில்சாமி ஆசிரியராக பணியாற்றினர் என்றால் சரிதான். அவரின் பிஎப் பணம் எல்லா வாரிசுகளுக்கும் கிடைத்தது என்றால் சரியல்ல எனக்கு தான் கிடைத்தது, அவரின் பிஎப் பணம் அனைவருக்கும் வந்தது என்றாலும் மற்ற வாரிசுகள் கையெழுத்து செய்து ஆட்சேபணை இல்லை என சொன்னதால் அந்த தொகை எனக்கு கிடைகபெற்றது என்றால் சரிதான். நான் சொல்வது போல் மயில்சாமி உயில் வைக்கவேண்டிய அவசியமில்லை என்றாலும்

அவ்வாறு எழுதியிருந்தால் பிஎப் பணம் குறித்தும் மயில்சாமி உயில் எழுதியிருப்பார் என்றால் சரியல்ல. 01.10.1993 பாகப்படி நாங்கள் சொத்துக்களை தனியாக அனுபவிக்கவில்லை என்றாலும் கூட்டாக தான் அனுபவிக்கிறோம் என்றால் சரியல்ல. பெண் வாரிசுகள் தாவா சொத்திலிருந்து வெளியேறிவிட்டனர் என வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்லும் உயிலை நிராகரித்து விட்டு 12ம் பிரதிவாதிக்கு சொத்தை பிரித்து கொடுக்க கடமைப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

வாய்ப்பளித்தும் இல்லை.

இச்சாட்சியம் என் முன்பு நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அது சரி என்று அவரால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி

பொள்ளாச்சி